செய்தி வெளியீடு எண் : 10 நாள் :05.04.2018

***தேனி மாவட்டம்***
***சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***தலைமையில் நடைபெற்றது:-***

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் சார்பில், மாவட்ட அளவில் சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் இன்று (05.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோவிலில் ரூ.118.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், மஞ்சளாறு அணையினை பொதுமக்களின் வசதிக்காக பூங்காக்களை ஏற்படுத்துவது குறித்தும், வைகை அணையில் பூங்காக்களை மேம்படுத்துவது குறித்தும், மேகமலை, ஹைவேவிஸ் பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள இடங்களை கண்டறிந்திடவும், சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு ஏதுவாக மாவட்டத்தில் உள்ள அனைத்து தங்கு விடுதிகளை முறைப்படுத்திடவும், அனுமதி இல்லாத விடுதிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது குறித்தும் மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் துறை அலுவலர்களுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், சுற்றுலாத்தளங்களில் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்திடவும், சுகாதாரமான குடிநீர், கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திடவும், சுற்றுலாத்தளங்களில் விற்பனை செய்யப்படும் உணவு பொருட்கள் தரமான உணவு பொருட்களாக என்பதனை கண்காணித்திடவும், சுற்றுலா தளங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டினை அறவே தவிர்த்திட பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தளங்கள் குறித்த புகைப்படங்கள் மற்றும் விபரங்களுடன் பொதுமக்கள் கூடும் இடங்களில் அறிவிப்பு பலகைகளை அமைத்திடவும், அனைத்து பொதுமக்களும் எளிதில் சுற்றுலாத்தளங்களுக்கு சென்று வர போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திடவும், குச்சனூர் அருள்மிகு சனீஸ்வரன் பகவான் திருக்கோவிலில் கட்டுப்பட்டு வரும் தங்கும் விடுதிக்கான கட்டடப்பணிகளையும், பராமரிப்பு பணிகளை விரைந்து முடித்து சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், சுற்றுலாத்தளங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆலோசனைக்கூட்டத்தில், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு.கல்யாண சுந்தரம் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி விஜயலட்சுமி அவர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர் திருமதி உமாதேவி அவர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.சேதுராமன் அவர்கள், பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) உதவி செயற்பொறியார் திரு.செல்வம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**